

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், செறுகோல் ஊராட்சி, குட்டைகுழி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (21.06.2016) உள் நோயாளி பிரிவுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தார். துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. எம்.மதுசூதனன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 383/2016 நாள்: 21.06.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குட்டைகுழி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (21.06.2016) நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், செறுகோல் ஊராட்சி, குட்டைகுழி, மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (21.06.2016) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள் நோயாளிகள் பிரிவு, வெளி நோயாளிகள் பிரிவு, ஊசி போடும் இடம், ஆய்வகம், ஸ்கேன் அறை, அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு அறை, பிரசவ அறை, இரத்த வங்கி ஆகியவற்றிற்கு நேரில் சென்று பார்வையிட்டு, பதிவேடுகளை ஆய்வு செய்தார். மேலும் காய்ச்சலினால் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் விவரங்கள், அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளையும் கேட்டறிந்தார்.

தற்போது மழை காலங்கள் தொடங்கியுள்ளதால் காய்ச்சலினால் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் விவரங்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவுபடுத்த வேண்டும். மேலும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை, குழித்துறை அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் பொதுமக்கள் மற்றும் நோயாளிகளின் பார்வைக்கு தெரியும்படி நிலவேம்பு குடிநீரினை தினந்தோறும் தயாரித்து, தேவையான அளவு வைத்துக்கொள்ள வேண்டும் என மருத்துவர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

ஆய்வின்போது துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் மரு. எம். மதுசூதனன், மரு. சேதுலெட்சுமி, மரு. மில்டா ஜெசி, வட்டார மருத்துவ அலுவலர் மரு. சரன மீனா, வட்டார சுகாதார கண்காணிப்பாளர் திரு. சார்லின் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.